அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்
தேசிய மட்டத்திலான "அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2021"
திருக்குறள் மனனம், ஒப்பித்தல் போட்டி - பிறந்த ஆண்டு 2007 (வளர்நிலை8)

தெரிவுப்போட்டி: வளாகத்தில் அன்னைத் தமிழ்முற்ற இறுதிப்போட்டி: 27.03.2021 28.03.2021

---

1. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. (26)

*செய்வதற்கு உண்மையிலேயே அரிதான செயல்களைச் செய்து முடிப்பார் பெரியார். ஆனால் சிறியோர்களோ செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டார்கள்.*

2. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.(71)

*அன்பிற்கும் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் கண்களிலிருந்து சுரக்கின்ற சிறிய கண்ணீரே, தம் உள்ளத்து அன்பைப் பலர் அறியக் காட்டிவிடும்.*

3. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு. (81)

*வீட்டிலிருந்து பொருள்களைப் போற்றி இல்லறம் நடத்துவதெல்லாம், விருந்தினரைப் போற்றி உதவி செய்யத்தான்.*

4. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. (101)

*ஓர் உதவியுமே ஒருவன் இன்னொருவனுக்குச் செய்யாத நேரத்தில், அவனுக்குச் செய்யும் உதவிக்கு இந்த மண்ணுலகமும் விண்ணுலகமும் ஈடாகுமா?*

5. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (293)

*தன் நெஞ்சம் அறிந்த ஒன்றைப் பிறர் அறியவில்லையே என்று எண்ணி, அவரிடம் பொய் சொல்லக் கூடாது. இவ்விதம் பொய் சொன்னால், அதை உணர்ந்த தன் நெஞ்சே தன்னைச் சுடும், தவறு என்று உணர்த்தும்.*

6. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். (294)

*தன் உள்ளம் அறிய ஒருவன் பொய்சொல்லாது நடப்பானானால், அவன் இந்த உலகத்தாரின் உள்ளங்களிலெல்லாம் நிலைத்து நிற்கும் புகழைப் பெறுவான், சிறந்து நிற்பான்.*

7. எல்லா விளக்கும் விளக்கல்லச் சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு (299)

*புறத்திலுள்ள இருளைப் போக்குகின்ற விளக்குகள் எல்லாம் விளக்கே அல்ல. அகத்திலுள்ள பொல்லாத இருளைப் போக்கும் பொய்யாமை என்னும் விளக்கே உண்மையான விளக்கு ஆகும்.*

8. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (391)

*கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். கற்றபின்னர் கற்ற அந்தக் கல்விக்குத் தக்கவாறு நெறியுடன் நிற்க வேண்டும்.*

9. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு (782)

*அறிவுடையவரின் நட்பு பிறைச்சந்திரன் வளர்ந்து கொண்டே வருதலைப் போன்றதாகும். அறிவற்ற பேதையரின் நட்போ நிறைமதியானது தேய்ந்து தேய்ந்து செல்லும் தன்மையைப் போன்றதாம்.*

10. நவில்தோறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783)

*நல்ல பல நூல்களைக் கற்கக் கற்க மேன்மேலும் பயன் தருதல் போல, பழகப் பழக நல்ல பண்புடையவரின் நட்பு சிறப்பைத் தரும்.*